பூண்டி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.ரா.பாண்டியன்.

ந.க.எண்: ஊநி–1/36/2023 நாள்: 17.02.2024

பொருள் மனைவரன்முறை செய்தல் – சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம் – பூண்டி ஊராட்சி – சர்வே எண்கள். 233/2B1B1, 233/2B2, 233/5B1 மற்றும் 233/6A ல் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஐஸ்வர்ய மகாலட்சுமி நகர் மனைப்பிரிவு மனை எண்கள் வரன்முறை செய்து உத்திரவிடல் – தொடர்பாக.

பார்வை
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களின் நடவடிக்கைகள்.
2. பூண்டி ஊராட்சி மன்ற தீர்மான எண்.51, நாள்: 17.02.2024.

.....

உத்தரவு

சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பூண்டி ஊராட்சி சர்வே எண்கள்.233/2B1B1, 233/2B2, 233/5B1 மற்றும் 233/6Aல் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஐஸ்வர்ய மகாலட்சுமி நகர் 9653 சமீ (2.38 ஏக்கர்) பரப்பளவில் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைபிரிவு மனை எண்கள் 1 முதல் 46 வரை வரன் முறைப்படுத்த நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்: ONA8TKU8/19235/2023/2024TCP நாள்:19.01.2024 ன்படி தொழிநுட்ப அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து கூராய்வு கட்டணமாக ரூ.18000/–ம் சம்மந்தப்பட்ட ஊராட்சி பொது நிதியில் 30.01.2024 அன்றும், வரன்முறைபடுத்தும் கட்டணமாக ரூ.21420/–யை 16.02.2024 அன்று சம்மந்தப்பட்ட அரசுதலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, ஊராட்சிமன்ற தலைவர், பூண்டி அவர்களால் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் சர்வே எண்.233/2B1B1, 233/2B2, 233/5B1 மற்றும் 233/6Aல் எண்ணிடப்பட்ட ஸ்ரீ ஐஸ்வர்ய மகாலட்சுமி நகர் 1–46 அனுமதியற்ற மனைப்பிரிவு மனை எண்களை கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

விண்ணப்பதாரர் பெயர்	--	திரு.ப.தமிழ்செல்வி க/பெ பழனிவேல்(எ)துரை,
முகவரி	--	பூண்டி
மனைப்பிரிவு அமையும் இடம்	--	அரசு மருத்துவமனை எதிரில், பூண்டி
மனைப்பிரிவு அமையும் சர்வே எண்	--	233/2B1B1, 233/2B2, 233/5B1 மற்றும் 233/6A 2/1B
பரப்பளவு	--	9653 சதுர மீட்டர் (அ) 2.38 ஏக்கர்
மனை எண்கள்	--	1 முதல் 46 வரை

நிபந்தனைகள்

- நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி மனை வரன்முறை செய்யப்படுகிறது.
- ஊராட்சிக்கு சொந்தமான நிலத்திலும், தெருவிலும், சாலைகளிலும், அரசுக்கு சொந்தமான இடத்திலும், சாலைகளிலும், பொது இடங்களிலும் எந்த விதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. வீட்டு வாசற்படிகள் முதலியவைகள் விண்ணப்பதாரரின் சொந்த இடத்தில் தான் இருக்க வேண்டும். வெளிப்பக்கம் திறக்கும் படியாக இருக்கக்கூடாது.
- கட்டிடம் கட்டுமிடத்தில் உரிமை சம்பந்தமான வில்லங்கங்களுக்கு ஊராட்சி பொறுப்பல்ல.
- கழிப்பறை , சாக்கடை, தொட்டி முதலியவை சுகாதார முறைப்படி எளிதாக சுத்தம் செய்ய ஏதுவான வகையில் அமைக்கப்பட வேண்டும். வீட்டிலிருந்து வெளியேறும் கழிவுநீர் தெருசாலையை பாதிக்காமல் ஊராட்சி வடிகாலில் சேரும் வகையில் நிர்மாணிக்கப்பட வேண்டும். வீட்டின் கூரைகள் தெருப்பக்கம் வெளியே நீட்டப்பட்டிருக்கக்கூடாது.
- கட்டிடம் கட்டி முடிக்கப்படுவதுடன் அதில் குடியேறும் முன் அதன் விபரத்தை தனி அலுவலர்/ஊராட்சித் தலைவர் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
- மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்
- உரிம நிபந்தனைகளுக்கும், உரிமம் பெற்ற வரை படத்திற்கும் மாறாகச் செய்வதாலும் ஊராட்சி கட்டிட விதிகளுக்கும் அல்லது வேறெந்த சட்ட / திட்டங்களுக்கும் மாறான வழியில் உரிமம் பெற்றிருந்தாலும் இந்த உரிமை தள்ளுபடி செய்யப்பட்டதாகக் கருதப்படும்.
- வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம் என்ற திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் ஒரு மரம் வளர்க்க வேண்டும்.
- நவீன கழிப்பிடம் அமைக்கப்பட வேண்டும்.

பூண்டி ஊராட்சி
கள்ளக்குறிச்சி மாவட்டம்
சின்னசேலம் ஒன்றியம்

ஊராட்சி மன்ற தலைவர்
பூண்டி.

பெறுதல்:

திரு.ப.தமிழ்செல்வி க/பெ பழனிவேல்(எ)துரை,
பூண்டி.

நகல்: இருப்பு கோப்புக்கு.

நகல்:

1. சார்பதிவாளர், சின்னசேலம் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) கள்ளக்குறிச்சி அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) சின்னசேலம் அவர்களுக்கு
   தகவலுக்காகக பணிந்து அனுப்பப்படுகிறது.

23-24 20-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17 ஆம் நாள்

பூண்டி ஊராட்சியின் சிறப்பு / அவசர கூட்டத்தின் நடவடிக்கைகள்.

இடம் : ஊராட்சி மன்ற அலுவலகம்

நேரம் : காலை / மாலை 11:00 மணிக்கு

தலைவர் திரு / திருமதி R. மாலதி அவர்களும்

மற்றும் 9 உறுப்பினர்கள் அவர்களும்

பொருள்

பொருள் எண் :- 51/2023-24

சின்னகேவம் ஊராட்சி பூண்டி ஊராட்சி ச.எண் 233/2B1B1, 233/2B2, 233/5B1, 233/6A - ல் அமைக்கப்படவுள்ள அனுமதியற்ற பழ் ஒன்றிய மகாலட்சுமி நகர் மனைப்பிரிவில் உள்ள மனைகளை வரன்முறைபடுத்தப் பொருட்டு நடப்பு அனுமதி வழங்கப்படுதை தொடர்ந்து (நகர் அமைவைப்பு உதவி இயக்குநர் கான்கேற்றுக்கி அவர்களின் உத்தரவு ந.க.எண் : ONA8TKV8/19235/2023/2024/TCP, நாள் : 19-01-2024 ன் படி) கூறாய்வு கட்டணமாக ரூ. 18000/- நிர்ணயிக்கப்பட்ட ஊராட்சி பொது நிதியில் 30/01/2024 அன்றும் கொண்ட மதிப்பில் 3% தொகையாக ரூ. 21420/- யை நிர்ணயிக்கப்பட்ட பிரிவு தலைப்பில் செலுத்தப்பட்ட வரவு வைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மனைகளை வரன்முறை செய்ய மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம்

தீர்மான எண் :- 51/2023-24

தீர்மானம் முடிவுகளாக தீர்மானிக்கப்படுகிறது.

V. மாலதி
துணைத்தலைவர்
பூண்டி ஊராட்சி.

1. தேவி
2. [illegible] P. M.
3. S. [illegible]
4. தி. [illegible]
5. த. [illegible]